

# மாற்றுத்திறனாளிகளுக்கு உபகரணங்கள் வழங்க தேர்வுமுகாம்

ராயக்கோட்டை.ஆக.24—

கிருஷ்ணகிரி மாவட்டம் ராயக்கோட்டை அருகே உள்ள திம்ஜேப்பள்ளி ஊராட்சி உள்ளுகுறுக்கை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்துக்கு உட்பட்ட கிராமங்களை சேர்ந்த மாற்றுத் திறனாளிகளுக்கு உபகரணங்கள் வழங்க பயனாளிகள் தேர்வுமுகாம் நடந்தது.

இதில் கிருஷ்ணகிரி மாவட்ட சுகாதாரத்துறை இணை இயக்குனர் டாக்டர்.பிரியராஜ் அறிவுருத்தலின்பேரில், கெலமங்கலம் வட்டார மருத்துவ அலுவலர் ராஜேஷ், மருத்துவ அலுவலர் விஸ்வந்த் ஆகியோர் பயனாளிகளை தேர்வு செய்தனர். முகாமின் முடிவில் மருந்தாளுனர் தேவராஜ் நன்றி கூறினார்.



செங்கல்பட்டில் மாற்றுத்திறனாளிகளுக்கு உதவி உபகரணங்கள் வழங்க தேர்வு முகாம் நடைபெற்றது.

## செங்கல்பட்டில்

# மாற்றுத்திறனாளிகளுக்கு உபகரணங்கள் வழங்க தேர்வு முகாம்!

செங்கல்பட்டு ஆக24

செங்கல்பட்டு ராஜேஸ்வரி வேதாசலம் அரசு கலைக்கல்லூரி வளாகத்தில் கொல்கத்தாவை சேர்ந்தகைகால்குறைபாட்டிற்கான தேசிய நிறுவனம் (என்ஐஎல்டி) காஞ்சிபுரம் மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நலத்துறை மற்றும் ஜிஎம்ஆர்தாம்பரம்திண்டிவனம் எக்ஸ்பிரஸ்வேஸ் லிமிடெட், செங்கல்பட்டு ஜிஎம்ஆர் வரலட்சுமி பவுண்டேசன் உள்ளிட்ட நிறுவனங்கள் இணைந்து மூன்று சக்கரவண்டி,பேட்டரியை கொண்டு இயங்கும் மூன்று சக்கரவண்டி, மடக்கு சக்கரநாற்காலி,ஊன்றுகோல்,காலிப்பர்,போன்றஉபகரணங்கள் இலவசமாக வழங்குவதற்கான தேர்வுமுகாம் நடைபெற்றது.

இம்முகாமில் 100க்கும் மேற்பட்ட அனைத்துத் தரப்பட்ட மாற்றுத்திறனாளிகள்கலந்துகொண்டுபயனடைந்தனர்.